www.padippakam.com


# சிறுவர் அமுதம்

13.04.92

சித்திரை 1992

கிண்ணம் 3 எண்ணம் 4

10/06/92
no: 4



»CHANCHIVE«
Postbox: 1205
7500 Holstebro . Danmark

## சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை

## KINDERFREUNDLICH MAGAZINE

படிப்பகம்

www.padippakam.com

''வலிமை என்பது மனதிலே இருக்கின்றது''

அன்புச் சிறுவர்களே,

உங்கள் எல்லோருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். இந்தப் புத்தாண்டுடன் மூன்றாவது புத்தாண்டை உங்களின் அமுதம் கடக்கின்றது. ஒவ்வொரு புத்தாண்டு வரும் போதும்... இந்த முறை வரும் புத்தாண்டு அது செய்யும் இது செய்யும் என்று நாமும் மற்றவர்களைப் போல எதிர்பார்த்து ஏமாந்து கொண்டிருக்கின்றோம்.

புத்தாண்டு வரும் போது எங்களுக்கு வயது ஏறுகின்றது. வயது ஏற ஏற நாங்கள் வளர்ந்து கொண்டிருக்கின்றோம் என்ற மகிழ்ச்சி எமக்குள் ஏற்படுகின்றது. ஆனால்... எமது நாட்டின் துயரங்களுக்கும் வயது ஏறிக் கொண்டிருக்கின்றது. இந்த வயதேற்றம் கவலையானதாகும்.

சொந்த நாட்டிலே எமது மக்கள் அனுபவித்துக் கொண்டிருக்கும் துயரங்களும் பட்டினிச் சாவுகளும் புத்தாண்டை எமக்கு அர்த்தம் அற்றவையாக்குகின்றன. நாங்கள் எந்தப் புத்தாண்டை அர்த்தம் உள்ளதாகக் காணப் போகின்றோம்?

அன்புடன்
ஆசிரியர்

படிப்பகம்

www.padippakam.com

# நன்றிகள்

சென்ற இதழ் தொடர்பாக எமக்குப் பல பாராட்டுக் கடிதங்கள் வந்திருக்கின்றன. அன்புச் சிறுவர்களே பகுதியில் எழுதப் பட்ட விடயங்கள் பலர் மத்தியில் சிந்தனையைத் தூண்டி உள்ளதை அந்தக் கடிதங்களில் காணக் கூடியதாக இருந்தன. இவ்வாறான சிந்தனைகளும் அவற்றுக்கான செயற்பாடுகளுமே இன்று எமக்குத் தேவையாக இருக்கின்றன. இதுவரை நாளும் சிறுவர்களுக்கான சஞ்சிகையாக நாம் நினைத்திருந்தாலும் பெரியவர்களும் விரும்பிக் கவனமாக வாசிக்கின்றார்கள் என்பதை அறிந்து பெரும் மகிழ்ச்சி கொள்ளுகின்றோம்.

அடுத்ததாகப் பெருக்கல் வாய்பாடுகளை வெளியிட்டு இவற்றுக்கெல்லாம் யார் பதில் சொல்லப் போகின்றார்கள்?? என்ற விடயம் பலரைச் சிந்திக்க வைத்து ஓர் அடையாள அணி வகுப்பையே நடாத்தியிருக்கின்றது. இதுவும் எமக்குப் பெரும் மகிழ்ச்சியைத் தருகின்றது. இந்த மகிழ்ச்சிகளுக்குக் காரணமான உங்களுக்கெல்லாம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்

ஆசிரியர், சிறுவர் அமுதம்

கடந்த மாத வினா விடைப் போட்டியில் மிகக் கூடுதலானவர்கள் கலந்திருக்கின்றார்கள். இது பெரும் மகிழ்ச்சியைத் தருகின்றது. தொடர்ந்தும் நீங்கள் எல்லோரும் கலந்து கொள்ள வேண்டும் என்றே விரும்புகின்றோம்.



படிப்பகம்

# நல்லதும் கெட்டதும்

முனிவர் ஒருவர் பாடசாலை ஒன்று நடாத்தி வந்தார். அந்தப் பாடாசாலையில் தியானம் செய்வதைப் பற்றிக் கற்பிக்கப்பட்டு வந்தது. இந்தப் பாடசாலையில் கற்பதற்காகப் பலர் வெளியூர்களிலிருந்தும் வந்திருந்தனர்.

இப்படி வந்திருந்தவர்களில் ஒருவன் ஒருநாள் திருடும் போது கையும் களவுமாகப் பிடிபட்டான். பிடித்தவர்கள் திருடியவனை முனிவர் முன் கொண்டு வந்தனர். முனிவர் இந்த நிகழ்ச்சியைப் பெரிது படுத்தவில்லை. சிலநாட்களின் பின்னர் அதே திருடன் திருடும் போது இரண்டாவது தடவையாகப் பிடிபட்டான். இம் முறையும் முனிவர் அதைக் கவனியாது விட்டுவிட்டார். இதனால் பிடித்துக் கொண்டு வந்தவர்கள் கோபப்பட்டார்கள்.

மூன்றாவது தடவையும் இந்தத் திருடன் கையும் களவுமாகப் பிடிபட்டான். முனிவர் முன் கொண்டு வந்து நிறுத்தினார்கள். இந்த முறையும் முனிவர் அதைக் கவனியாது வேலை செய்து கொண்டிருந்தார். இதைக் கண்டு எல்லோரும் கோபங் கொண்டனர். ''குருவே இவன் மூன்றாவது முறையாகவும் திருடி இருக்கின்றான். இவன் இங்கிருப்பதா? நாங்கள் இங்கிருப்பதாக? என்ற முடிவு தெரிந்தாக வேண்டும்'' என்று சொன்னார்கள்.

இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த முனிவர் ஒன்றும் பேசாமல் இருந்தார். முனிவர் ஒன்றும் பேசாமல் இருப்பது திருடனை இங்கே வைத்துக் கொள்ளவே என்று எலலோரும் நினைத்துக் கோபம் கொண்டனர். ஆனாலும் மீண்டும் ஒருமுறை முனிவரிடம் நாங்கள் இருப்பதா திருடன் இருப்பதா என்று கேட்டனர்.

''நீங்கள் அறிவுள்ளவர்கள். உங்களுக்கு எது நல்லது எது கெட்டது என்று தெரியும். நீங்கள் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம். நீங்கள் விரும்பிய யாரிடமும் படித்துக் கொள்ளலாம். ஆனால் இவனைப் பாருங்கள். இவன் நிலை மிகவும் பரிதாபமானது.



இவனுக்கு எது நல்லது? எது கெட்டது என்று தெரியாமல் இருக்கின்றது. இவனுக்கு என்னை விட்டால் வேறு யாரால் கற்றுக் கொடுக்க முடியும்?? நீங்கள் போய்வரலாம் என்றார்.

திருடனின் கண்களி ல் கண்ணீர் கண்ணீராய்ப் பெருகியது. முனிவரின் கால்களைக் கட்டிப் பிடித்து அழுது கதறினான். அந்த நேரத்திலிருந்து அவனிடமிருந்த திருட்டுக் குணம் நீங்கியது. நல்லது கெட்டது தெரிந்து வாழத் தொடங்கினான்.

கொம்பியூட்டர் விடை:: முதலில் 9 இரண்டாவது ÷ மூன்றாவது % என்று பட்டன்களைத் தட்டினால் எல்லாம் 11111111 என்று வரும். அதை அப்படியே வைத்துக் கொண்டு = தட்டினால் விடை 12345678 என்று வரும். ஒரு கல்குலேட்டர் சரியாக இயங்குகின்றதா என்பதை அறிய இப்படி நாலு பட்டன்களையும் தட்டிப் பார்க்க வேண்டும்.

www.padippakam.com

# வருடப்பிறப்பு

13.04.1992

புத்தாண்டு வந்ததாம்
புத்தாடை தந்ததாம்
பத்தாடையோடு நாம்
பல ஆடை போட்டாலும்
செத்தாடும் எம் மண்ணை
சிந்திக்க முடியாமல்
வைத்தாடும் ஆட்டத்திலே
வந்துதித்தாய் புத்தாண்டே!

பூமி தன்னைத் தானே சுற்றுவதென்பதும் சூரியனைச் சுற்றுவதென்பதும் உங்களுக்குத் தெரியும். சூரியனைச் சுற்றுவதாலே பருவகாலங்கள் ஏற்படுகின்றன. இந்தப் பருவகால மாற்றங்களே உலகெங்கும் கொண்டாட்டங்களை ஏற்படுத்துகின்றது.

மார்ச் மாதம் 22-ந் திகதி பூமியின் மத்திய கோட்டிற்குச் சூரிய ஒளி வருகின்றது. அன்று முதல் சூரியனின் ஒளி வடக்கே நோக்கிச் செல்லத் தொடங்குகின்றது. இலங்கை பூமியின் மத்திய கோட்டிற்கு வடக்கே இருக்கின்றது. ஏப்பிரல் 13-ஆம் 14-ஆம் திகதிகளில் சூரியனின் ஒளி இலங்கையிலும் இந்தியாவின் தென் பகுதிகளிலும் நேரடியாக ஏற்படுகின்றது.

இந்த நாளையே தமிழரும் சிங்களவரும் புத்தாண்டு தினமாக இலங்கையில் கொண்டாடுகின்றார்கள். இந்தக் காலத்தில் விவசாயிகளின் பயிர்கள் விளைச்சலுக்காகச் சூரியனை எதிர்பார்த்து நிற்கின்ற நாளாகும்.



படிப்பகம்

வினாவிடைப் போட்டி முடிவுகள் (பங்குனி)

1) ALBERTVILLE என்ற இடத்தில் ஒலிம்பிக் பனி விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. இந்த இடம் fபிரான்ஸ் நாட்டின் அல்ப்ஸ் மலைப் பகுதியில் உள்ளது.

2) சோழ மன்னனின் கொடியில் புலிச் சின்னம் இருந்தது.

3) இந்துக்கள் கல்விக் கடவுளாகச் சரஸ்வதியை வணங்குகின்றார்கள்.

4) தமிழரும் சிங்களவரும் புத்தாண்டு தினத்தை ஒரே நாளில் கொண்டாடுகின்றார்கள். தமிழ் சிங்களப் புத்தாண்டு என்றே அழைக்கப்பட்டு வருகின்றது.

5) எதிர்ப்பாற் சொற்கள்:

| | |
|---|---|
| மாணவன் | மாணவி |
| ஆசிரியர் | ஆசிரியை |
| இளவரசி | இளவரசன் |
| அரசி | அரசன் |
| வேலைக்காரன் | வேலைக்காரி |
| பாடகன் | பாடகி |
| நடிகை | நடிகன் |
| ஆண் தொழிலாளி | பெண் தொழிலாளி |

இம்முறை வினாவிடைப் போட்டியில் அதிகமானவர்கள் கலந்து கொண்டுள்ளனர். இவர்கள் எல்லோருக்கும் எமது பாராட்டுக்களைத் தெரிவிப்பதுடன் ''கதை அமுதம்'' புத்தகமும் பரிசாக அனுப்பியுள்ளோம்.

www.padippakam.com

சரியான விடைகளை எழுதியவர்கள்:
செல்வி.செல்வா கந்தவனம் N.9595 SORVAER NORWAY

செல்வி.சிந்துஜா குணரத்தினம் 8670 HOF
செல்வி.கேமா செல்வராஜா 5650 SOLINGEN 19
செல்வி.ஜெகதா புவனேஸ்வரன் 5172 LINNICH
செல்வி.த.பாமினி 7200 TUTTLINGEN
செல்வி.தர்சினி கமலநாதன் 5650 SOLINGEN 1
செல்வி.வாசுகி நந்தகோபன் 5170 JULICH
செல்வி.கபிலினி தெய்வேந்திரன் 5650 SOLINGEN 19
செல்வி.மேகலை மகேந்திரன் 4005 MEERBUSCH 2
செல்வி.சுதர்சினி சந்திரதாஸ் 5600 WUPPERTAL 11
செல்வி.மதிவதனி அருணகிரிநிதன் 3590 BADWILDUNGEN
செல்வி.சுபாஜினி கனகரெட்ணம் 4937 LAGE
செல்வி.மதிவதனி இரத்தினம் 5172 LINNICH-TETZ
செல்வி.சுகி கனகரெட்ணம் 4937 LAGE
செல்வி.தர்சி செல்வராஜா 5650 SOLINGGEN 19
செல்வி.சிவதர்சினி சிவராஜா 4100 DUISBURG 28
செல்வன் லிங்காதரன் கமலநாதன் 5650 SOLINGEN 1
செல்வன் கே.ஜனார்த்தன் 4053 JUCHEN 1
செல்வன் சிவகுமார் சிவசுப்பிரமணியம் 4714 SELM
செல்வன் ஏ.அகிலன் 7200 TUTTLINGEN
செல்வன் சிவா செல்வராஜா 5650 SOLINGEN 19
செல்வன் கஜன் தெய்வேந்திரன் 5650 SOLINGEN 19
செல்வன் எஸ்.ரமேஸ் 4053 JUCHEN 1
செல்வன் விஜிதரன் மகேந்திரன் 5650 SOLINGEN 1

செல்வன்.சிவாஸ்கர் சிவராஜா 4100 DUISBURG 28



படிப்பகம்

www.padippakam.com

# வினாவிடைப் போட்டி

## சித்திரை 92

1) எப்பிரல் 13-ஆம் திகதி பிறந்துள்ள தமிழ்ப் புத்தாண்டின் பெயர் என்ன??

2) சீனா, யப்பான் நாட்டவர்கள் எந்த மாதத்தில் புத்தாண்டைக் கொண்டாடுகின்றார்கள்??

3) ஆணையும் பெண்ணையும் குறிக்கப் பொதுவாக வழங்கும் சொற்கள் ஐந்தெழுதுக.

4) தமிழ் அரசரில் யாருடைய கொடியில் மீன் சின்னம் பொறிக்கப்பட்டிருந்தது.

5) பின்வரும் தலைநகரங்கள் எந்தெந்த நாடுகளின் தலைநகரம் என்று குறிப்பிடுக.
பேர்ண், பேர்லின், வீன், கெல்சிங்கி, பாங்கொக், டாக்கா, மணிலா, பீக்கிங், சியோல் கெய்ரோ,

6) ஒரு நாட்டின் பெயர் அந்த நாட்டின் முத்திரைகளில் ''நிப்பொன்''(NIPPON) என்று குறிக்கப்படுகின்றது அந்த நாட்டின் பெயர் என்ன?

விடைகளை 30.04.92 ற்கு முன்னதாக அனுப்பி வைக்கவும்.



படிப்பகம்

www.padippakam.com






## அப்பாவும் மகளும்

---

மகள்: அப்பா, நாயும் பூனையும் மாமிசம் சாப்பிடும் மிருகங்கள். ஆனால்,பூனை நடக்கும் போது சத்தம் கேட்காமலிருக்கின்றது. அதற்குக் காரணம் என்ன?

அப்பா : மகனே, நாயும் பூனையும் மாமிசம் சாப்பிடும் மிருகங்கள் தான். நாயும் எலியைப் பிடித்துத் தின்னும். பூனையும் எலியைப் பிடித்துத் தின்னும். நாயால் வேகமாக ஓட முடியும். ஆனால் பூனையால் நாயைப் போல வேகமாக ஓட முடியாது. வேகமாக ஓட முடியாத பூனை நடக்கும் போது அதன் காலடி கேட்காமல் இருந்தால் எலியை இலகுவாகப் பிடித்து விட முடியும். பூனை நடக்கும் போது கால் நகங்களை உள்ளே இழுத்துக் கொண்டு தனது பஞ்சு போன்ற பாதத்தால் நடக்கின்றது. எல்லாம் இயற்கையின் அற்புதங்கள். இல்லையா மகனே??



படிப்பகம்

அப்பாவும் மகளும் தொடர்

மகள் : அப்பா, முதுவேனிற்காலத்தில் மரங்களில் இலைகள் உதிர்ந்து விடுகின்றனவே, அதற்குக் காரணம் என்ன அப்பா?..

அப்பா : மகளே, நம்முடைய உடம்பில் இரத்தம் ஓடுவதற்குத் தண்ணீர் தேவையாக இருப்பது போலவே மரஞ்செடிகளில் சாறு ஓடுவதற்குத் தண்ணீர் தேவையாய் இருக்கின்றது. நாங்கள் தண்ணீரைக் குடிக்கின்றோம். மரஞ் செடிகளும் தரையில் உள்ள தண்ணீரை வேர்களின் மூலம் எடுத்துக் கொள்ளுகின்றன. நாம் குடிக்கும் தண்ணீர் சிறுநீராகவும் வியர்வையாகவும் வெளியேறுகின்றது. மரஞ்செடிகள் எடுத்துக் கொள்ளும் தண்ணீரும் இலைகள் மூலமாக ஆவியாகி வெளியேறுகின்றன.

வேனிற்காலத்தில் வெப்பம் அதிகமாக இருக்கும். மழை கிடையாது. மரஞ்செடிகளுக்குத் தரையிலிருந்து கிடைக்கக் கூடிய தண்ணீரின் அளவு மிகக் குறைவாகவே இருக்கும். குறைந்த அளவு தண்ணீரைக் கொண்டே மரஞ்செடிகள் வாழ வேண்டும். அதற்காக நீர் ஆவியாகிப் போவதைத் தடுக்க வேண்டும். இலைகளை உதிர்த்து விட்டால்... ஆவியாகிப் போவதைத் தடுத்து விட முடியுமல்லவா? அது தான் மரஞ் செடிகள் வேனிற் காலத்தின் பிற்பகுதியில் இலைகளை உதிர்த்து விடுகின்றன. காலத்திற்கு ஏற்றவாறு வாழ்வதை இந்த மரஞ் செடி கொடிகளே அறிந்திருக்கின்றன என்பதை அறியும் போது ஆச்சரியமாக இல்லையா மகளே????

www.padippakam.com

## தமிழர் கலாச்சார விழா

எதிர் வரும் 01.08.92 சனிக்கிழமை சிறுவர் அமுதம் சஞ்சிகை தமிழர் கலை கலாச்சார விழாவொன்றைக் கொண்டாடத் திட்டமிட்டுள்ளது இந்த விழாவின் பெரும்பாலான நிகழ்ச்சிகளைச் சிறுவர்களின் நிகழ்ச்சியாகவே இடம் பெறச் செய்ய எண்ணியுள்ளோம்.

நிகழ்ச்சிகள் தமிழரின் கலை கலாச்சாரங்களைப் பிரதிபலிப்பதாக அமையும்.
விழாவில் பங்கு கொள்ள விரும்புவோர் .....
தாங்கள் பங்கு பற்றும் நிகழ்ச்சி பற்றிய விபரங்களுடன் உடன் ''சிறுவர் அமுதம்'' முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.
பேச்சு, கதைசொல்லுதல், பாட்டு, அபிநயப்பாட்டு, கிராமியநடனம், பரதம், சிறுவர்நாடகம், என்பன இடம் பெறவுள்ளன.
தமிழர்களின் கலை கலாச்சாரங்கள்; தமிழர்களின் பிரச்சினை என்பனவற்றை வெளிப்படுத்தும் ஜேர்மன் மொழி நிகழ்ச்சிகளும் வரவேற்கப் படுகின்றன. இந்த நிகழ்ச்சியில் எங்கிருந்தும் கலந்து கொள்ளலாம். விபரங்களை உடன் தெரிவிக்கவும். ஆனி மாதம் நிகழ்ச்சி நிரல் வெளியிட வேண்டியிருப்பதால் உடன் தொடர்பு கொள்ளவும்.

''சிறுவர் அமுதம்''



படிப்பகம்

www.padippakam.com




*»Das Leben wird uns nur dann gelingen, wenn wir alle gemeinsam etwas unternehmen«, laut Botschaft dieses Kindertheaters.*

## தமிழ்ப் புத்தாண்டுவிழா 04.04.92

எர்வ்ற்மாவட்டத்தில்(Erft Kreis) தமிழ்ப் புத்தாண்டு விழா 04.40.92 சனிக்கிழமை குறிப்பிட்ட நேரத்திற்குத் தொடங்கிக் கொண்டாடப் பட்டது. சிறுவர் சிறுமியரின் நடனங்கள் பேச்சு நாடகம் என்று நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட 19 சிறுவர் சிறுமியருக்கு குத்து விளக்குகள் பரிசு வழங்கப் பட்டன. 19 குத்துவிளக்குகளும் டோர்முண்ட்'' துர்க்கா'' வியாபார நிறுவனம் வழங்கியிருந்தது. விழா 15.00 மணிக்கு ஆரம்பமாகியது. குறிப்பிட்ட நேரத்திற்கே மண்டபம் நிறைந்த கூட்டமாக இருந்தது. இவ்விழாதொடர்பாக ஜேர்மன் தினசரிகள் நீண்ட செய்திகளை வெளியிட்டு முக்கியத்துவம் கொடுத்திருந்தன.


படிப்பகம்

www.padippakam.com






வினா விடைப் போட்டிகளில் தொடர்ந்து பங்கு பற்றி வரும் செல்வன்.லிங்காதரன் கமலநாதன் 5650 SOLINGEN - 1, செல்வி மதிவதனி அருணகிரிநாதன் 3590 BADWILDUNGEN இருவருக்கும் நொய்ஸ் யூனிவர்சல் ஏஜன்ஸி வியாபார நிறுவனத்தினரால் அன்பளிப்புச் செய்யப் பட்ட ''திருக்குறள் தெளிவான உரை'' புத்தகம் புத்தாண்டுப் பரிசாக மேலதிகமாக வழங்கப் படுகின்றது. இப்புத்தகம் 292 பக்கங்கள் கொண்டதாகும். புத்தகங்களை அன்பளிப்புச் செய்து உதவிய ''யூனிவர்சல் ஏஜன்ஸி'' நிறுவனத்தினருக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.



படிப்பகம்

# பிதாகோரஸ்

2500 வருடங்களுக்கு முன்னர் இந்த மேலை நாட்டினருக்குக் கணிதம் தொடர்பாக எதுவும் தெரிந்திருக்கவில்லை. அந்தக் காலத்திலே தோன்றிக் கணிதத் துறையையே உருவாக்கியவர் பிதாகோரஸ் என்ற கணிதமேதை ஆவார்

இன்றைய கணிதத் துறைகளில் பிதாகோரஸின் முறைகள் இருக்கின்றன. மதிக்கப் படுகின்றன என்றால் அவரின் திறமை போற்றப் பட வேண்டியதொன்றாகும். சிறுவயதிலே படிப்பிலும் ஆராய்ச்சிகள் செய்வதிலும் மிகுந்த ஆர்வம் உள்ளவராகக் காணப் பட்டார். இவருடைய காலம் தோல்களிலே எழுதத் தொடங்காத காலமாக இருந்தது. இவரைப் பற்றிய செய்திகள் பிற் காலத்து ஆசிரியர்களாலே எமக்குத் தெரிய வருகின்றது.

முக்கோணத்தின் உள்கோணம் இரண்டு செங் கோணத்திற்குச் சமம் என்று நிரூபித்துக் காட்டினார். ஜியோமிதி எனப்படும் கேத்திர கணிதத்தைக் கற்பிக்கக் காரணமானார். தனது பதினாறாவது வயதில் கணிதத்தில் பல முறைகளைக் கண்டுபிடித்தார். அந்தக் காலத்தில் கல்வி கற்க அறிஞர்களைத் தேடிச் செல்ல வேண்டும். பிதாகோரஸ் முப்பது ஆண்டுகளாக பாரசீகம் பாபிலோனியா இந்தியா ஒன்ற நாடுகளுக்குச் சென்றார். இந்தக் காலத்தில் தான் புத்தபகவான் தனது கொள்கையைப் பரப்பிக் கொண்டிருந்தார்.

எகிப்து நாட்டிலே அதிககாலம் தங்கியதாக நம்பப்படுகின்றது. தனது ஐம்பது வயதிலும் கற்றுக் கொண்டிருந்தார். தான் கற்றுக் கொண்டதைப் பிறருக்கும் கற்பிக்க விரும்பி பாடசாலை ஒன்றை உருவாக்கினார். ஆனால் சாமுஸ் தீவின் அரசனிடமிருந்து தப்புவதற்காகத் தென் இத்தாலிக்கு வந்து குடியேறினார்.

இசைக்கும் கணிதத்திற்கும் உள்ள தொடர்பைக் கண்டறிந்தார். பிதாகோரஸ் மத நம்பிக்கை மிகுந்தவர். ஒழுக்கமாக வாழ்ந்தார். இவரது கெட்ட காலம் அரசியலில் இறங்கினார். இதனால் இவருக்கு வீழ்ச்சியும் கெட்ட பெயரும் ஏற்பட்டது. மக்கள் இவருக்கு எதிராகச் செயல் படத் தொடங்கினார்கள். இதனால் இத்தாலியை விட்டு வெளியேறினார். தனது எண்பதாவது வயதில் மரணமானார்.

பிதாகோரஸ் காலமாகி இருநூறு வருடங்களுக்குப் பின்னர் ரோம் நகரில் அவரது உருவச் சிலையை வைத்தனர். கிரேக்கர்களில் மிகவும் துணிச்சலானவர் பெருந்தன்மையானவர் ஒழுக்கமானவர் என்றெல்லாம் இவரைப் பற்றிய செய்திகள் புகழ்ந்து கொண்டிருக்கின்றன.



www.padippakam.com

# புதிர்



ஔவைப்பாட்டி ஒருநாள் வீதி வழியாக நடந்து சென்று கொண்டிருந்தார். வழியில் பிள்ளையார் கோவில் ஒன்றிருந்தது. களைப்படைந்த ஔவையார் ஓய்வெடுக்க அக் கோவி லுக்குச் சென்றார். காலை நீட்டிக் கொண்டு அமர்ந்தார்.

கோவிலுக்குள் வந்த ஐயர் ஔவையார் காலை நீட்டிக் கொண்டிருப்பதைப் பார்த்ததும் கோபப்பட்டார். ''பாட்டி நீங்களே எல்லாம் அறிந்தவர். உங்கள் செயல் அப்படி இல்லையே! பிள்ளையாருடைய பக்கமாகக் காலை நீட்டிக் கொண்டிருக்கலாமா? இது கடவுளையே அவமதிப்பது போலில்லையா?'' என்று கேட்டார்.

ஐயர் சொன்னதைக் கேட்ட ஔவையார் ''இப்படிக் காலை நீட்டிக் கொண்டிருப்பது நிட்சயமாகப் பிழையல்ல!'' என்று சொல்லி ஏன் பிழையில்லை என்று விளக்கமும் சொன்னார். ஔவையார் சொன்ன விளக்கம் என்னவாக இருக்கும்??. உங்களுக்குத் தெரிந்தால் எழுதி அனுப்புங்கள்.



படிப்பகம்



# நன்றி

ஊரிலுள்ள பிரமுகர்களுக்கும் பண்டிதர்களுக்கும் பணக்காரன் ஒருவன் விருந்து வைக்க விரும்பினான். தனது வேலைக்காரன் ஈசாப்பை அழைத்தான். நல்ல கறி வாங்கி வந்து சமைக்குமாறு கட்டளையிட்டான். சந்தைக்குச் சென்ற ஈசாப் நாக்குகளையே வாங்கி வந்து கறி சமைத்து வைத்திருந்தான்.


விருந்தினர் எல்லோரும் நாக்குக் கறியைச் சுவைத்துச் சாப்பிட்டனர். ஆனால் மறுபடியும் மறுபடியும் நாக்குக் கறியே பரிமாறப் படுவதை வீட்டுக்காரன் அவதானித்தான். ஈசாப்பை அழைத்தான். ''என்ன ஒரே நாக்குக் கறிதான் இருக்கின்றது?.''என்று கேட்டான். அதற்கு ஈசாப் ''உலகத்தில் நல்லதென்றால் நாக்குத்தான்! நல்லதெல்லாவற்றிற்கும் நாக்கே காரணமாக இருக்கின்றது என்றான்.

விருந்திற்கு வந்தவர்கள் ஈசாப்பின் பதிலைக் கேட்டு ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்தனர். சில வாரங்கள் சென்றன. வீட்டுக்காரன் ஈசாப்பை அழைத்தான். இந்த முறை விருந்திற்கு மிகவும் கூடாத கறியாகச் சமைத்து வைக்க வேண்டும் என்று கட்டளை இட்டான்.

இந்தமுறையும் ஈசாப் நாக்கையே வாங்கி வந்து சமைத்து வைத்திருந்தான். வீட்டுக்காரனுக்கு ஒரே ஆச்சரியமாக இருந்தது. ''ஈசாப் நல்லகறி என்றால் நாக்கைக் கொண்டு வருகின்றாய்! கூடாத கறி என்றாலும் நாக்குக் கறிதானா?'' என்று கேட்டான். அதற்கு ஈசாப் சொன்ன பதில் எல்லோரையும் ஆச்சரியப்பட வைத்தது. நாக்கை விடக் கூடாதது உலகில் எதுவுமில்லை. பொய்பேசுவது நாக்கு! பெரும் பிழைகளுக்கெல்லாம் காரணம் நாக்கு! அழிவுகள் எல்லாவற்றிற்கும் நாக்கே காரணம்! உலகிலே மிக மிகக் கூடாதது நாக்குத்தான் என்று பதில் சொன்னான்.



# கர்வம்




புல்வெளியில் ஓர் எருது மேய்ந்து கொண்டிருந்தது. எங்கிருந்தோ பறந்து வந்த கொசு எருதின் மேல் அமர்ந்தது. எருதின் பிடரியில் இருப்பது ஏதோ சிங்காசனத்தில் இருப்பது போல கொசுவிற்குத் தோன்றியது. தான் பெரிய அரசன் என்றும் எருது தன்னைப் பணிவுடன் சுமப்பதாகவும் கொசுவிற்குத் தோன்றியது. வெகு நேரம் சென்றதும் எருதிடம் ''எருதே நான் செல்லைமா?'' என்று கேட்டது. இதைக் கேட்ட எருது ''கொசுவே நீயோ சிறிய தூசி போன்ற கொசு! நீ வந்ததும் எனக்குத் தெரியாது போவதும் தெரியாது! ஏன்தான் எனக்குச் சொல்லிக் கொண்டிருக்கின்றாய்? நீ இருந்தால் என்ன? போனால் என்ன? என்று அலட்சியமாகப் பதில் சொன்னது.

www.padippakam.com

தோல் நாற்றம் வந்த திசையை நோக்கி நாய்கள் ஓடிச் சென்றன. தொட்டி ஒன்றில் ஆட்டுத் தோல்கள் ஊறவைக்கப்பட்டிருந்தன. தொட்டிக்கு அடியிலே தோல்கள் இருந்தன. மேலே தண்ணீர் இருந்தது. நாய்களுக்குத் திடீரென ஒரு யோசனை வந்தது. தொட்டிக்குள் உள்ள தண்ணீரைக் குடித்து விட்டால்?? தோலை எடுத்துச் சாப்பிடுவது எளிது என்ற முடிவுக்கு வந்தன.


தொட்டிக்குள் உள்ள தண்ணீரைக் குடிக்கத் தொடங்கின. தண்ணீர் அதிகமாக இருந்தது. நாய்கள் தண்ணீரை அதிகமாகக் குடித்ததால் வயிறு வெடித்துச் செத்தன.





படிப்பகம்

# சிங்கத்தின் நிலை



வேடர்கள் வைத்த கூட்டுக்குள் சிங்கம் ஒன்று அகப்பட்டுக் கொண்டது. கூட்டுக்குள் சிக்கிய சிங்கம் வெளியே செல்ல முடியாமல் தவித்தது. அந்த வழியே குள்ளநரி ஒன்று வந்தது. அடைபட்டுக் கிடக்கும் சிங்கத்தைக் கண்டது. தனக்குச் சிங்கத்தினால் எந்த விதமான ஆபத்தும் வராது என்ற துணிவில் சிங்கத்தைப் பார்த்து ''ஏ சிங்கமே! நீ தான் காட்டரசன் என்று பெருமையோடு எல்லோரையும் அடிமைப்படுத்தி வைத்திருந்தாயே! இப்போது உன்னுடைய வீரம் கம்பீரம் எல்லாம் என்னவாயிற்று?? என்றெல்லாம் இகழ்ந்தது.

குள்ளநரியின் பேச்சைக் கேட்ட சிங்கம் குள்ளநரியைப் பார்த்து ''நண்பனே நீ என்னை இகழவில்லை. எனது நிலையே என்னை இகழுகின்றது என்று சிங்கம் சொன்னது.

''ஒருவன் தனது நிலையிலிருந்து தாழ்ந்துவிட்டால்? எல்லோருக்கும் சிறு துரும்பாகவே தோற்றம் அளிப்பான்''

# மகிழ்ச்சியும் அமைதியும்

ஒரு நாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். கிழக்குப் பக்கத்து நாட்டைக் கைப்பற்றித் தனது ஆட்சியின் கீழ் கொண்டு வர விரும்பினான். பெரும் படையுடன் கிழக்கு நாட்டின் மீது போர் தொடுத்தான். போர் நீடித்தது. ஆயிரக் கணக்கில் மக்கள் மடிந்தார்கள். யுத்தத்தினால் பஞ்சமும் பட்டினிச் சாவுகளும் ஏற்பட்டன.

இரண்டு வருடங்கள் நீடித்த கடுமையான சண்டையின் பின்னர் கிழக்கு நாட்டைக் கைப்பற்றித் தனது ஆட்சியின் கீழ் கொண்டு வந்தான். யுத்தத்தினால் பெற்ற வெற்றியைப் பெரும் விழாவாகக் கொண்டாடுமாறு மக்களுக்குக் கட்டளை இட்டான்.

அரசனின் கட்டளை என்றபடியால் நாடெங்கும் விழாக் கோலமாகவே இருந்தது. அரசன் துறவி ஒருவரிடம் ஆசி பெறச் சென்றான். அரசனைத் துறவி வரவேற்றார். ''அரசே உங்கள் எண்ணம் நிறைவேறி விட்டது. இப்பொழுது மகிழ்ச்சி தானே?'' என்று துறவி கேட்டார். ''துறவியாரே என் முன்னோர்கள் யாராலும் சாதிக்க முடியாத செயலைச் செய்துவிட்டேன். என்னுடைய மகிழ்சிக்குக் கேட்கவா வேண்டும்?'' என்றான் அரசன்.

www.padippakam.com



''உனது அடுத்த திட்டம் என்ன?'' என்று துறவி கேட்டார். ''மேற்குப் பக்கத்து நாட்டையும் கைப்பற்றி என்னுடைய ஆட்சியின் கீழ் கொண்டு வருவது.'' என்று அரசன் சொன்னான்.

''அதற்குப் பின்னர் என்ன செய்வாய்?'' என்று துறவி கேட்டார். ''எனது நாட்டைச் சுற்றியுள்ள எல்லா நாடுகளையும் வென்று என்னாட்சியின் கீழ் கொண்டு

வரவேண்டும். எனது நாட்டு மக்கள் அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டும்.'' என்று அரசன் பதில் சொன்னான். ''அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் நாட்டை ஆளுவதுதான் உனது திட்டம் என்றால்?.. அதை நீ எப்பவோ செய்திருக்கலாம். எத்தனையோ ஆயிரக்கணக்கில் மக்களைக் கொன்றுதான் மகிழ்ச்சியையும் அமைதியையும் ஏற்படுத்த வேண்டும் என்றில்லையே! என்று துறவி சொன்னார். அரசன் யோசித்துக் கொண்டிருந்தான்.

பேராசிரியர் எ.சோதி எழுதிய ''சின்னச் சின்ன நன்னெறிக் கதைகள்'' என்ற புத்தகத்திலிருந்து.

www.padippakam.com



# நன்றி

சோதிநாதன் என்பவர் சிறந்த ஆசிரியராக விளங்கினார். கற்பித்தல் என்பதைப் புனிதமான பணியாக நினைத்துப் புனிதமாகவே கற்பித்து வந்தார். இவரது பண்புகளும் இவரது கற்பித்தல் முறைகளும் இவருக்கு அதிகமான மாணவர்களை உருவாக்கிக் கொண்டிருந்தது. நாளுக்கு நாள் மாணவர் தொகை அதிகமாகி வந்தது.

வெளியூர்களிலும் ஆசிரியரின் புகழ் பரவத் தொடங்கியது. மிகத் தொலைவிலிருந்தும் மாணவர்கள் இவரிடம் கல்வி கற்க வரத் தொடங்கினார்கள். வெளியூரிலிருந்து வரும் மாணவர்கள் தங்கிப் படிப்பதற்காக விடுதி ஒன்றைக் கட்ட விரும்பினார். அதற்காக நிதி திரட்டத் தொடங்கினார். ஆசிரியரின் மீது எல்லோருக்கும் நம்பிக்கையும் மதிப்பும் இருந்ததால்,நிதியும் சேர்ந்து கொண்டிருந்தது.

விடுதி கட்ட ஆசிரியருக்கு நிதி தேவைப்படுவதை அறிந்த பெரும் பணக்காரன் ஒருவன் ஆசிரியரிடம் ஆயிரம் ரூபாவைக் கொண்டு வந்து கொடுத்தான். ஆசிரியர் பணத்தை வாங்கிக் கொண்டார். பணக்காரன் செல்லவில்லை. ஆச்சரியத்துடன் ஆசிரியரைப் பார்த்துக் கொண்டு நின்றான். ஆசிரியர் பணக்காரனைப் பாராட்டவுமில்லை

www.padippakam.com

நன்றியும் சொல்லவில்லை.

ஐயா, பெருந் தொகையான பணத்தை நான் தந்தும் நீங்கள் நன்றி என்று கூடச் சொல்லவில்லையே! என்றான். உமது பணம் நல்ல செயலுக்காகப் பயன்படப் போகின்றது நீர்தான் எனக்கு நன்றி சொல்ல வேண்டும் என்று ஆசிரியர் சொன்னார். பணக்காரன் வாயடைத்துப் போய் நின்றான்.





படிப்பகம்

www.padippakam.com

# அன்னை அன்பு



என்னைப் பெற்ற நற்றாயே,
எங்கே அன்பு கற்றாயே,
என்றன் கண்ணே! என்பாயே,
எனக்குத் தந்தே தின்பாயே!

கண்டால் முத்தம் அளிப்பாயே,
கட்டி அணைத்துக் களிப்பாயே,
ஆடை அணிகள் தரிப்பாயே,
அழகு பார்த்துச் சிரிப்பாயே!


தெய்வம் என்றே துணிவேனே,
தினமும் பாதம் பணிவேனே!


தமிழ்நெறிக் காவலர் : மயிலை சிவமுத்து



படிப்பகம்

www.padippakam.com





# வண்ணத்துப் பூச்சி

வண்ண வண்ணமான இறகுகளைக் கொண்ட இது ஒரு பூச்சியாகும். இதையே பட்டாம் பூச்சி என்றும் சொல்லுவார்கள். இதன் இறகுகள் மிக மிக மென்மையானவை. தொட்டால் உடனே உதிர்ந்து விடக் கூடியவை. பற்பல வண்ணங்களில் உலகெங்கும் காணப்படுகின்றன. சில வகை கூட்டம் கூட்டமாகத் திரிகின்றன. இவை கடுங் குளிரைத் தாங்க முடியாதவை. குளிருக்குப் பயந்து பல ஆயிரக் கணக்கான கிலோ மீற்றர் தூரம் பறந்து செல்லுகின்றன.



படிப்பகம்

தலை, வயிறு, தொண்டை என்று உடல் மூன்று பாகங்களைக் கொண்டது. தலைப் பகுதியில் இரு கூட்டுக் கண்களும் இரு உணர்வு கொம்புகளும் இருக்கின்றன. மலர்களின் மணத்தை நுகரவும் ஒலிகளைக் கேட்கவும் இவை பயன்படுகின்றன. சுவையைக் கால்களினால் அறிகின்றன. வாயில் தாடை இல்லாததால் உணவை மெல்ல முடியாதவை. நாக்கு நீண்ட குழல் போல இருக்கும். இதையே பூக்களுக்குள் விட்டுத் தேனை உறிஞ்சிக் குடிக்கும். தொண்டைப் பகுதி மூன்று துண்டங்களாக உள்ளன. ஒவ்வொன்றிலும் இரு கால்கள் இருக்கின்றன. முன் பகுதிக் கால்கள் மிகச், சிறியவை. உபயோகம் இல்லாதவை.

மின்சாரமீன்

தங்களின் உடலில் மின் சக்தியை உற்பத்தி செய்யும் பல வகை மீன்கள் இருக்கின்றன. குறிப்பிட்ட சில தசைகளிலே மின் சக்தி உற்பத்தியாகின்றது. இந்தத் தசைகள் சுருங்க முடியாதனவாகும். நரம்பு தூண்டும் போது சுருங்காமல் மின்சக்தியை உண்டாக்குகின்றது.

மின்சார ஈல் எனப்படும் மீன் 500 வோல்ட் மின்சக்தியை உற்பத்தி செய்கின்றது. நீரில் அருகிலுள்ள ஓர் உயிரினத்தைச் செயல் இழக்க இந்த மின்சக்தி போதுமானதாகும். பெரும் பாலான மீன்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவே இந்த மின்சக்தியைப் பயன்படுத்து கின்றன. ஒரு சில மீன்கள் தமது இரையைச் செயல் இழக்கச் செய்வதற்கும் மின் சக்தியைப் பயன் படுத்துகின்றன.

பேன்

------ ஒன்றோடு சேர்ந்திருந்து அதையே உறிஞ்சிக் குடித்து உயிர் வாழுவதை ஒட்டுண்ணி என்று சொல்லுவார்கள். ஒட்டுண்ணிகள் எல்லா உயிரினங்களிலும் இருக்கின்றன. பேனும் ஒருவகை ஒட்டுண்ணியாகும். பேன் பூச்சி வகையைச் சேர்ந்தது. இதற்கு இறகு கிடையாது. மிகச் சிறிய உணர் கொம்பு இருக்கும். மயிரால் இதன் உடம்பு மூடப்பட்டிருக்கும்.

காலகளில் கூரிய நகங்கள் இருக்கும். இதனுடைய முட்டை நீள் உருண்டையாக இருக்கும். முட்டையிலிருந்து குஞ்சு வெளியே வந்ததும் நகரத் தொடங்கி விடும். பேன்களில் பல வகைகள் உண்டு. ஒவ்வொரு வகையும் குறிப்பிட்ட ஒருவகை உயிர் மீதே ஒட்டிக் கொள்ளுகின்றன. ஒருவகை கடிப்பவை. இவை பறவைகளின் உடலிலே ஒட்டிக் கொள்ளுகின்றன.

சில உறிஞ்சிக் குடிப்பவை. இவை மனிதர்களிடம் ஒட்டிக் கொள்ளுகின்றன. கூர்மையான அலகு போன்ற வாய் உண்டு. உடம்பில் துளையிட்டு இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கின்றன. இவை இரத்தத்தைக் குடிக்கும் போது அரிப்பு ஏற்படுகின்றன. பேன் கடியினால் டைபஸ் போன்ற நோயும் பரவுகின்றது. பேன் தலை மயிருக்குள் ஒழிந்து வாழ்ந்தாலும் ஒருவரிலிருந்து இன்னொருவருக்கு மிக எளிதாகப் பரவி விடுகின்றன.

www.padippakam.com

# மாம்பழம்

ஒரு குட்டி முயல் காட்டில் உலாவிக் கொண்டிருந்தது. அப்போது ஒரு முள்ளம் பன்றி அங்கே வந்தது. முள்ளம் பன்றி குட்டி முயலுக்கு மாம்பழங்களைக் கொடுத்தது. மாம்பழத்தைத் தின்ற குட்டி முயலுக்குத் தானும் மாமரம் வளர்க்க வேண்டும் என்ற ஆசை வந்தது.

முள்ளம் பன்றியிடம்'' எனக்கும் மாமரம் வளர்க்க ஆசையாக இருக்கின்றது.'' என்று சொன்னது. ''அதெற்கென்ன நான் மாங்கன்று தருகின்றேன். அதை உன்னுடைய தோட்டத்தில் நாட்டி வளர்த்தாய் என்றால் ஒரு வருடத்தில் நிறைய மாம்பழங்கள் கிடைக்கும்'' என்று முள்ளம் பன்றி சொன்னது.

முள்ளம்பன்றி தனது தோட்டத்துக்குக் குட்டி முயலையும் அழைத்துச் சென்றது. அங்கே மாங் கன்று ஒன்றைப் பிடுங்கிக் கொடுத்தது. குட்டி முயல் மாங்கன்றை நாட்டித் தான் அதிக மாம்பழம் சாப்பிடப் போவதாகச் சொல்லிக் கொண்டு துள்ளித் துள்ளி வந்தது.



படிப்பகம்

மாங்கன்றுடன் வரும் குட்டி முயலை வழியில் ஓநாய் ஒன்று கண்டது. ''என்னடா குட்டி முயல் பாட்டும் ஆட்டமுமாக வருகின்றாய்? என்று ஓநாய் வழி மறித்துக் கேட்டது. அதற்குக் குட்டி முயல்''நான் மாங்கன்று நட்டு மாம்பழம் தின்னப் போகின்றேன்'' என்று சொன்னது. மாம் பழம் என்று சொன்னதுமே ஓநாய்கு வாயில் நீர் ஊறியது.

''மாம்பழமா?? தா தா எனக்கு மாம்பழம் என்றால் நல்ல விருப்பம்.'' என்று ஓநாய் கேட்டது. ''ஏய் ஓநாய் இது மா ம்பழமல்ல! மாங்கன்று. இதை நட்டு வளர்த்தால் அதிக நாளின் பின்னர் அதிகமான மாம்பழங்கள் வரும்''என்று குட்டி முயல் சொன்னது. ''அப்படியா? அப்படி என்றால் இந்த மாங்கன்றை என்னுடைய தோட்டத்தில் வந்து நாட்டி விடு. மாம்பழம் வந்ததும் உனக்கும் தருகின்றேன்'' என்று ஓநாய் சொல்லியது. அதற்குக் குட்டி முயல் மறுத்தது. மாங்கன்றைத் எனது தோட்டத்தில் நடவில்லை என்றால்?... உன்னைப் பிடித்துச் சாப்பிட்டு விடுவேன் என்று ஓநாய் மிரட்டியது.

ஓநாயுடன் பேசிப் பயனில்லை என்பதைக் கண்ட குட்டி முயல் வேறு வழியில்லாமல் ஓநாயின் தோட்டத்தில் மாங்கன்றை நாட்டி விடச் சம்மதித்தது. தனது தோட்டத்திற்குச் சென்ற ஓநாய் மண்வெட்டியை

www.padippakam.com

எடுத்து வந்தது. குட்டி முயலிடம் ''நீயே குழி வெட்டி நட வேண்டும்'என்று மிரட்டியது. மண்வெட்டி பாரமாக இருப்பதாகக் குட்டிமுயல் அழுதது.

''சரி பரவாயில்லை நானே குழி வெட்டுகிறேன்'' என்று ஓநாய் குழி வெட்டத் தொடங்கியது. சிறிய குழியைத் தோண்டிவிட்டு இது காணுமா என்றது. இல்லை இல்லை! பெரிய மரமாக வளரும் பெரிய ஆழமான குழியாகத் தோண்டு என்று முயல் சொன்னது. ஓநாய் பெரிய ஆழமான குழியைக் களைக்கக் களைக்க வெட்டியது. ஓநாயைப் போல நாலு மடங்கு குழிக்குள் ஓநாய் நின்று இது போதுமா என்று கேட்டது.

ஆமாம் இது போதும். மாங்கன்று வளர்ந்து மாம்பழங்கள் காய்த்து வரும் வரை நீ இங்கேயே இரு. எனக்கு வீட்டில் நிறைய வேலை இருக்கின்றது. மாம்பழம் காய்த்ததும் கொண்டு வந்து தருகின்றேன் என்று சொல்லிவிட்டுக் குட்டி முயல் துள்ளித் துள்ளிக் கொண்டு பாடிப்பாடி வீட்டுக்குச் சென்றது.

*** சோடி அன்னம் இறந்து விட்டால் ஆண் அன்னம் தற்கொலை செய்து இறந்து விடும்.

*** கழுகு கூடு கட்டி வாழும் பறவையாகும். கழுகின் எச்சம்(மலம்) பட்டால் பச்சை மரம் பட்டுப் போய்விடும்.

*** கரடிக்கு 42 பற்கள் வரை இருக்கின்றன. கரடிக் குட்டிகள் இரண்டு வருடத்திற்குத் தாயுடன் வளருகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

*** மகாத்மா காந்தி தனது இரண்டு கைகளினாலும் எழுதக்கூடியவர்.

*** நெப்போலியன் குதிரைச் சவாரி செய்து கொண்டே நித்திரை செய்வதிலும் கெட்டிக்காரன்
*** பயங்கரப்படங்களை இயக்குவதில் பெருமை பெற்ற அல்பிரட் கிட்ச்கொக் பயந்த சுபாவம் உள்ளவர்.

*** வால்ட்டிஸ்னியின் கண்டு பிடிப்பான மிக்கி மவுசிற்கு அந்தப் பெயரை வைத்தவர் அவரின் மனைவிதான்.

*** மில்டன் தனது கண்பார்வையை இழந்த பிறகுதான் சுவர்க்கத்தின் இழப்பு என்ற அவரது நாவலை எழுதினார். இசைமேதை பீத்தோவனும் தனது காதுகள் செவிடாகிய பின்னரே இசையில் பெரும் மாற்றங்களைச் செய்து எல்லோரையும் இசை வெள்ளத்தில் மெய் மறக்கச் செய்தார்.

*** இந்தியாவின் தேசிய கீதமான ''ஜனகண மன'' பாடலை இரவீந்திரநாத் தாகூர் இயற்றினார். நோபல் பரிசு பெற்ற முதல் இந்தியர் இவர் தான்.


உங்களுக்குத் தேவையான
தமிழ்எழுத்து வேலைகளுக்கு
02271/66527 இலக்கத்திற்குத்
தொடர்பு கொள்ளவும்.



படிப்பகம்

www.padippakam.com

SIRUUAR AMUTHAM No 28



இலங்கை நாடு எம் நாடு
இனிய எங்கள் தாய் நாடு
அழகு மலைகள் நிறை நாடு
ஆறுகள் பாய்வது எம் நாடு
மழைவனம் உள்ளது எம் நாடு
நெல்லொடு தேயிலை தென்னை பனை
நிலையாய் ஓங்கும் எம் நாடே

---

தொடர்புகளுக்கு:
SIRUUAR AMUTHAM,
IM WINKEL - 2,
5013 ELSDORF/RHLD
GERMANY
TEL. 02271/66527

# CHILDREN LITE RATURE MAGAZIN

படிப்பகம்